1970 ஆகஸ்ட் 25]

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் பகுதியில் கூடலூர் ஆறும், வெள்ளாறும் சந்திக்கும் இடத்தில் பேரணை கட்ட வேண்டும் என்று ஆங்கிலேயர் காலத்திலேயே ஆய்வு செய்யப்பட்டது. நம்முடைய அரசு அதை ஆய்வு செய்ய முயலுமா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆங்கிலேயர் காலத்தைப்பற்றித் தெரியாது. வெள்ளாறு, நெரிஞ்சிக்குடி ஆறு இவற்றிற்கு மேல் ஒரு மைல் தூரத்தில் அணை கட்டும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. ஆற்றில் நீரின் அளவு குறைவு. பாசனத்திற்கு பற்றுக்குறை ஏற்படும் என்பதால் அதை மேற்கொள்ள முடியவில்லை.

லட்சுமணம்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக் கட்டடம்

*24 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், லட்சுமணம்பட்டியில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக்கு கட்டடம் கட்ட தீர்மானிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், எப்போது தீர்மானிக்கப்பட்டது?

(உ) தற்போது எந்த நிலைமையில் இருந்து வருகிறது?

(எ) காலதாமதம் ஏற்படுவதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:

(அ) ஆம். தீர்மானிக்கப்பட்டது.

(இ) 25—11—1967.

(உ) தற்போது கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

(எ) கட்டடம் கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுசெய்த பின்பும் கட்டடம் கட்டும் இடம் பற்றி எழுப்பப்பட்ட ஆட்சேபனையினுல் கட்டடம் கட்டும் வேலை தாமதிக்கப்பட்டது.

Greater Madurai Scheme

*25 Q.—Thiru T. MARTIN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Greater Madurai Scheme and the scheme regarding the inclusion of some areas of Madakulam Panchayat in the Madurai Municipality was deferred by the Government of Tamil Nadu; and

(b) if so, the reasons for the same?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:

(அ) ஆம்.